[1974 ஏப்ரல் 2

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இலங்கை படகுகள் மட்டுமல்ல, நான் முன்பு சொன்னதுபோல, ஜப்பான், ரஷ்யப் படகுகள் கூட இங்கே மீன் பிடிக்க வருகின்றன. அதை எல்லாம் மாநில அளவில் தடுக்க முடியாது. மத்திய அரசுதான் இந்தச் சட்டத்தை நிறைவேற்றி, அந்நிய நாடுகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு—கடலில் எல்லைகளை வரையறுக்க வேண்டும். நம்மால் அதை எல்லாம் தடுக்க முடியாது.

சேலத்தில் புறச்சாலை அமைப்பு

*708 வின—திரு. கி. ஜெயராமன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் புறச்சாலை அமைப்புத் திட்டம் எப்போது செயல் படுத்தப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வேலை சீக்கிரம் எடுத்துக் கொள்ளப்படும். அது 1975-ம் ஆண்டு மார்ச் இறுதிக்குள் முடிவடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கி. ஜெயராமன் : நகர எல்லையின் மதிப்பீடு என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ சண்முகம் : நகர எல்லையின் மதிப்பீடு என்னிடத்தில் இல்லை. நில ஆர்ஜிதத்திற்காக மட்டும் ரூ. 19,71,700 மதிப்பீடு. நில ஆர்ஜிதத்தோடு புறச்சாலை அமைக்கும் பணியின் திட்ட மதிப்பீடு, ரூ. 34,27,700 ஆகும்.

மானாமதுரை ஒன்றியத்திலுள்ள புதுக்கோட்டை சாலை

*709 வினா—திரு. த. சோணையா : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், தென் புதுக்கோட்டைக்குத் தார்ச் சாலை போடும் திட்டம் அரசிடம் உண்டா ?

(இ) ஆம் எனில், மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.